

மேடவாக்கத்தில் வம்சம் கருத்தரிப்பு மையத்தை எஸ்அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மேடவாக்கம் தலைவர் பி.ரவி, யூனியன் சேர்மன் சங்கீதா பாரதிராஜன், டாக்டர் வசுந்தரா தியாகராஜன், மருத்துவமனை நிர்வாகிகள் டாக்டர்கள் எஸ்.பரமசிவன், சிலம்புச்செல்வி, எஸ்.பி.ஆர்த்தி சுமல்தா,.பிரசன்னா, எஸ்ஆர்.தன்வர்ஷா சுமல்தா, திலீபன், செல்வராஜ், முருகேசன் ஆகியோர் உடன் இருந்து திறப்பு விழாவை சிறப்பித்தனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

24–03–2025 நிகழ்வுகள்



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

நாடாளுமன்றத்தில் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக நடந்த கூட்டு நடவடிக்கைக் குழு மற்றும் அதன் தீர்மானங்கள் குறித்து விவாதிக்க திமுக துணை பொதுச்செயலாளரும் திமுக நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று காலை மக்களவையில் ஒத்தி வைப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.

**மும்மொழிக் கொள்கையின்கீழ் மாணவர்கள் கற்கும் மற்ற மொழிகள் யாவை?**

**தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கேள்வி**



நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மும்மொழிக் கொள்கையின் கீழ் கற்பிக்கப்படும் மொழிகளின் விவரங்கள் குறித்து திமுக நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் தாய்மொழி தவிர மற்ற மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள், இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி அல்லாத இந்திய மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள், தமிழ்நாட்டில் உள்ள கேந்திரிய வித்யாலயாக்களில் (கே.வி) தற்போது பணிபுரியும் தமிழ், இந்தி மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை விவரங்கள் முதலியவற்றை வெளியிடக் கேட்டு ஒன்றிய அரசிடம் கோரியுள்ளார்.

அதேபோல் மாணவர்களுக்கு அவரவர் தாய்மொழிகளில் கற்பிக்க கே.வி.க்கள் கொள்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கையும் வைத்துள்ளார்.

**கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் கிராமப்புற மாணவர்களை ஊக்குவிக்க கோரிக்கை**

**தருமபுரி அ.மணி**



கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் ஊக்குவிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள பாரம்பரிய விளையாட்டுகள் குறித்து தருமபுரி மக்களவை உறுப்பினர் அ. மணி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எஸ்சி/எஸ்டி/ஓபிசி மாணவர்கள் அதிகமாக இருக்கும் கிராமப்புற மற்றும் தொலைதூர பழங்குடிப் பகுதிகளில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், பள்ளி மாணவர்களின் திறமையைக் கண்டறிந்து, சர்வதேச அளவில் பங்கேற்க அவர்களுக்குப் பொருத்தமான வாய்ப்புகள் மற்றும் பயிற்சியை வழங்குவதற்கான அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்களின் விவரங்கள், நாட்டில் விளையாட்டை ஊக்குவிக்க மாணவர்களுக்கு மேலும் அதிக வசதிகளை உருவாக்க ஒன்றிய அரசு வகுத்துள்ள புதிய திட்டங்கள் யாவை எனவும் அவர் கேட்டுள்ளார்.

**கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் கிராமப்புற மாணவர்களை ஊக்குவிக்க கோரிக்கை**

**காஞ்சிபுரம் திமுக எம்.பி. செல்வம் மற்றும் திருவண்ணாமலை திமுக எம்.பி. சி.என்.அண்ணாதுரை கேள்வி**





நடப்பு நிதியாண்டில் திறன் இந்தியா திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற மற்றும் பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்து மக்களவையில் திமுக எம்.பி. க்கள் செல்வம். ஜி மற்றும் சி.என்.அண்ணாதுரை ஆகியோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தத் திட்டம் நாட்டின் தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள ஏழை மற்றும் கிராமப்புற சமூகங்களைச் சென்றடைவதை உறுதி செய்ய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள், கடந்த மூன்று ஆண்டுகளில் திறன் இந்தியா திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை, பயிற்சி பெற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள், மேற்படி திட்டத்தின் வெற்றி விகிதத்தை மதிப்பிடுவதற்கு உருவாக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுமுறையின் விவரங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதில் மேற்படி திட்டத்தின் தரம் மற்றும் செயல்திறனை அரசாங்கம் எவ்வாறு கண்காணிக்கிறது எனும் விவரங்கள் ஆகியவற்றை வெளியிடுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

# கரூரில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

## அமைச்சர் செந்தில் பாலாஜி பங்கேற்பு!

கரூர், மார்ச் 26–

கரூரில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கலந்து கொண்டார். சிறுபான்மையினருக்கு எதிராக ஒன்றிய அரசு கொண்டுவரும் சட்டங்களை நெஞ்சுரத்தோடு எதிர்த்து பாதுகாத்து காவலராக திகழ்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என தெரிவித்தார்.

கரூர் ஈத்கா பள்ளிவாசலில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அத்தார் ஜமாத் சின்ன பள்ளிவாசல் மற்றும் ஈத்கா பள்ளிவாசல் தலைவர் சையது ஜலால், செயலாளர் சபியில்லாகான், கௌரவ தலைவர் சர்புதீன் ஹாஜியார், துணைத்தலைவர் ஹனிபா, பொருளாளர் தர்காதுபேல், புகழூர் ஹபீபுல்லாஆசாத், கழக சட்டத் துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் என். மணிராஜ், கழக சிறுபான்மை பிரிவு மாநில துணைத்தலைவர் முனவர்ஜான், கரூர் மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் நவாஸ் கான், துணை அமைப்பாளர் செரிப் முஜிபுர் ரஹ்மான், முன்னிலை வகிக்க, துணைத் தலைவர் ஹக்கீம் பாவா தொகுப்புரையில், இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர் வைத்துறை அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி கலந்து கொண்டு பேசியதாவது:–

திராவிட மாடல் முதல்வர் தளபதி மு. க ஸ்டாலின் அவர்கள் சிறுபான்மையி னருக்கு நண்பனாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள். எப்போதெல்லாம் ஒன்றிய அரசு சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் நடத்துகிறதோ அப்போதெல்லாம் நெஞ்சுரத்தோடு முதல் நபராக நின்று எதிர்க்கக் கூடியவர். இஸ்லாமியர்களுக்கு பாதுகாப்பு அரணாக செயல்பட்டு வருகிறார்கள். சிறுபான்மை மக்களுக்கு எதிரான சட்டங்களை ஒன்றிய அரசு கொண்டுவந்த போது எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றி பாதுகாவலராக இன்றைய தினம் திகழ்கின்றார்கள்.

**முதன் முதலாக இட ஒதுக்கீடு வழங்கியவர் கலைஞர்!**

தமிழ்நாடு அரசு நிதி நிலை அறிக்கையில் சிறுபான்மையினர் நலன் என்று பார்த்தோமானால், பள்ளி வாசல்களை புனரமைக்க ரூ. பத்து கோடி நிதி வழங்கி மகிழ்ச்சி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். ஒவ்வொரு வகையிலும் என்ன செய்ய வேண்டும் என உணர்ந்து செயல்பட்டு வருகிறது இந்த அரசு. சில கோரிக்கைகளை இங்கே வைத்தார்கள். முதன்முதலாக இட ஒதுக்கீடு வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்தான். பள்ளிவாசலில் கட்டுவதற்கு அனுமதி கேட்டுள்ளீர்கள். விரைவில் அனுமதி அளிக்கப்படும். மின் மாற்றிகளை மாற்றிட கோரிக்கை வைத்ததை ஏற்று உடனே நிறைவேற்றி தந்தோம். சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களுக்கான உதவிகளை ஒன்றிய அரசு நிறுத்தி விட்டது.

நூற்றுக்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு திராவிட மாடல் அரசு உதவி வழங்கிவருகிறது. அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் உங்கள் சகோதரனாக நண்பனாக இருந்து உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவேன். முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய கோரிக்கைகளை கொண்டு சென்று நிறைவேற்ற முயற்சி எடுப்பேன். ஹஜ் பயணம் செல்வோரின் வசதிக்காக சென்னையில் ஹஜ் இல்லம் கட்டுவதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள். நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். எந்த அளவுக்கு யோசித்து இருந்தால் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அறிவித்து நிதி வழங்கி இருப்பார்கள் என எண்ணிப் பார்க்க வேண்டும். கல்வி உதவித் தொகையை நிறுத்தி விட்டனர். ஒரு லட்சம் மாணவர்களுக்கு இப்போது தமிழ்நாடு அரசு உதவி தொகை வழங்கிக் கொண்டிருக்கிறது நம்முடைய அரசு. திராவிட மாடல் அரசு பள்ளி வாசல்கள் சார்பில் ஏழைகளுக்கு உதவி செய்ய தயாராக இருக்கிறது. 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார்,

கரூர் மாநகரச் செயலாளர் எஸ்.பி. கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பாரத், பகுதி கழக செயலாளர்கள் கரூர் கணேசன், க. சுப்ரமணியன், ஆர் எஸ்.ராஜா, ஆர் ஜோதிபாசு, விஜிஎஸ்.குமார், புகழூர் நகர மன்ற தலைவர் குணசேகரன், காலனி செந்தில், வெங்கமேடுசக்திவேல், இரா பிரபு, கா .அன்பரசன், மாநகர கழக நிர்வாகிகள் கேவிதங்கவேல், எம்.பாண்டியன், கேஎஸ். அறிவின்ஸ், எம்நிஷா, அங்கு நா.பசுபதி, ஆர். வெங்கடேஷ், கே.எம். பாலகிருஷ்ணன், பி.சண்முகம், கே ஆர் சுந்தர்ராஜன், ஆரோக்கிய ஜெயபால், பி. பழனிவேல், ஜீவரத்தினம், சுப்பிரமணி, அ.க.இளமுருகு, வட்டக் கழக செயலாளர்கள், கரூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றியம் கீழக்குறிச்சி கிராம கலங்காத கண்ட ஐயனார் கோயில் ஜல்லிக்கட்டு விழாவை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தொடங்கி வைத்தார் . போட்டியில் வெற்றி பெற்ற மாடுகளுக்கும் வீரர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழகம் சார்பில் ரொக்கப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

## ஒன்றிய அரசை நேரடியாகவும் கடிதம் மூலமும் வலியுறுத்துவோம்!

# சேலம் மாநகராட்சியைச் சுற்றி ‘வெளிவட்டச் சாலை’ அமைக்கும் திட்டம்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு விரிவான விளக்கம்!

சென்னை, மார்ச் 26 -

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது பேசிய பொதுப்பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, “சேலம் மாநகராட்சியைச் சுற்றி வெளி வட்டச் சாலை அமைக்கும் திட்டம்” குறித்து விரிவான விளக்கமளித்தார்.



சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இரா.அருள்:** சேலம் மாநகர், சுற்றுச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**அமைச்சர் எ.வ.வேலு:** சேலம் மாநகராட்சியைச் சுற்றி வெளிவட்டச்சாலை அமைக்க விரிவான சாத்தியக்கூறு*Detailed Feasibility Report* (DFR) ஆராயப்பட்டு வருகிறது.

**இரா. அருள்:** சேலம் என்பது மிகப்பெரிய ஒரு நகரம். மிகப்பெரிய அளவில் வளர்ந்துவரக்கூடிய நகரம். அந்த நகரத்தைப் பொறுத்த வரையில், சேலத்தில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. உள்வட்ட சாலை என்பது, ஒரு *ring road* என்பது மிகவும் அவசியமானது. அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**எ.வ. வேலு:** சேலம்பெங்களூரு சாலையில், கமலாபுரம் விமான நிலையம் பகுதியில் தொடங்கி தாரமங்கலம், இளம்பிள்ளை, நடுவனேரி, காக்காபாளையம், ஆட்டையாம்பட்டி மற்றும் வெண்ணந்தூர் வழியாக மல்லூர் இணையும் வகையில் 45 கிலோ மீட்டர் நீளத்திற்கு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலமாக நடைபெற்று வருகிறது.

மற்றொன்று, உறுப்பினர் குறிப்பிட்டபடி, ஒரு வெளிவட்டச் சாலை அமைக்க கமலாபுரம் விமான நிலையம் பகுதியில் தொடங்கி ஏற்காடு, அடிவாரசாலை, திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை, கருமந்துார் சாலை ஆகியவற்றைக் கடந்து சேலம், உளுந்துார்பேட்டை மின்னம்பாளைத்தில் இணையும் வகையில் சாலை அமைக்க போக்குவரத்துச் செறிவு, நில எடுப்பு, மதிப்பீடு, திட்டப் பணிகள் மதிப்பீடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மின்னம் பாளையைத்திலிருந்து மல்லூர் செல்லும் பகுதியிலே மலை அதிகமாக இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதியிலே சாலை அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை. ஆக, மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு, இரண்டு கட்டங்களுக்குரிய DAPRம், DPRம் தயாரிக்கும் பணி இப்போது நடைபெற்று கொண்டிருக்கிறது. அதை விரைந்து செயலாற்றுவதற்கு ஒன்றிய அரசாங்கத்திற்கு நேரடியாகவும் அல்லது கடிதம் மூலமாகவும் வலியுறுத்தப்படும்.

மேலும் - ஐந்து *road* பகுதியிலே பொதுவாக நெடுஞ்சாலை துறை சாலையிலே கழிவுநீர் வடிகால் அமைப்பதில், மழைநீர் வடிகால் மட்டுமே அமைக்கப்பட்டு வருகின்றது. கழிவுநீர் வடிகால்கள் நெடுஞ்சாலைத் துறையால் அமைக்கப்படுவதில்லை. அதையெல்லாம் *Corporation* தான் அமைப்பார்கள். இருப்பினும் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நெடுஞ்சாலைத் துறை பராமரிப்புள்ள இச்சாலையின் 1.2 கிலோ மீட்டர் நீளத்தில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு அரசின் நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும். இன்னொன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாலத்தினை *box culvert* பாலமாக தரமுயர்த்தும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலை நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பிலுள்ள செவ்வாபேட்டை, இளம்பிள்ளை சாலையாகும். ரவுண்டானா முதல் மூலப்பிள்ளையார் கோயில் வரையுள்ள சாலைக்கு மழைநீர் வடிகால் அமைப்பதற்கு அரசின் நிதிநிலைக்கேற்ப அதையும் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## திருப்பூர் மாவட்டம் - தாராபுரத்தில்-இன்று

# தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்தும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப்போட்டி!

திருப்பூர், மார்ச் 26–

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்தும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி 26.03.2025 புதன் கிழமை அன்று காலை 9.00 மணியளவில் திருப்பூர் மாவட்டம், தாராபுரம், மகாராணி கலை அறிவியல் கல்லூரியில் நடைபெறுகிறது. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எ.வி. கல்பனா வரவேற்புரையில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ் குமார், தி.ரைசிங் சன் ஆங்கில இதழ் ஆசிரியர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கோவை மண்டல உயர் கல்வித்துறை இணை இயக்குநர், பேராசிரியர். முனைவர். வி.கலைச்செல்வி, தாராபுரம் மகாராணி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.தமிழ்ச் செல்வி ஆகியோர் முன்னிலையில் தமிழ் மற்றும் ஆங்கிலத் தலைப்புகளில் பேச்சுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ. பிரகாஷ் ஆகியோர் பேச்சுப் போட்டியைத் துவக்கி வைத்து, சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இதில் திருப்பூர் கிழக்கு, தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் இந்நாள் முன்னாள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத்தின் செயல் வீரர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர். திருப்பூர் மாவட்ட பேச்சுப்போட்டி ஒருங்கிணைப்பாளர், தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் நன்றியுரையாற்றுகிறார்.

பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர் ப.கனகராசன் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார்.

## தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ் ராஜா தந்தை

# கீரை தமிழ்ச்செல்வன் 28வது ஆண்டு நினைவு தினம்!

## கழக நிர்வாகிகள் அஞ்சலி!

புதுக்கோட்டை,மார்ச் 26–

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ் ராஜா தந்தையும், முன்னாள் புதுக்கோட்டை மாவட்ட துணைச் செயலாளர் கீரை தமிழ்ச்செல்வன் 28வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சத்தியமங்கலத்தில் உள்ள கீரை.தமிழ்செல்வன் கல்வி வளாகத்தில் அமைந்துள்ள நினை விடத்தில் உள்ள அவரது சமாதியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே செல்ல பாண்டியன், கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், டாக்டர் முத்துராஜா எம்எல்ஏ, மாநில விவசாய அணி துணைத் தலைவர் த. சந்திரசேகர் , மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் வெ.முத்து கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம் மாநகர பொறுப்பாளர் ராஜேஷ், கரம்பக்குடி பேரூராட்சி தலைவர் உ.முருகேசன், பேரூராட்சி துணைத் தலைவர் நைனா முகமது, அணி தலைவர்கள் ஜெ.அசரப் அலி, ராஜேந்திர சோழன்,

தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆ. கலைச்செல்வன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மு. கலைஞர் கருணாநிதி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கை பழனிசாமி, மாநகர இளைஞரணி அமைப்பாளர் கணேஷ் செந்தில்,ராசி பரூக், மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் தெய்வானை, ராஜ பெரியண்ணன், வாகை அண்ணாதுரை.மாமன்ற உறுப்பினர்கள்ஐ.எம்.பால்ராஜ், சி. மதியழகன், பேரூராட்சி கவுன்சிலர் க.வீரையா, பன்னீர்செல்வம், தீத்தப்பன் மற்றும் மாவட்ட ஒன்றிய பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு நினைவஞ்சலி செலுத்தினர்.



கழகத்தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை கணியூர் ஊராட்சியில் முதல்வர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டிகளை மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுக்கோப்பைகளை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் ஏ.வி. அன்பரசு ரகு, விநாயகா பழனிச்சாமி, வேலுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, 24.3.2025 அன்று கோயம்புத்தூர் வழக்கறிஞர் சங்கத்தின் வழக்கறிஞர் சேம நல நிதிக்கு ரூபாய் 72,000/த்தினை மாவட்ட முதன்மை அரசு வழக்கறிஞர் அருள்குமார், கோவை வழக்கறிஞர் சங்க நிர்வாகிகளிடம் வழங்கினார். நிகழ்ச்சிக்கு கழக சட்டத்துறை இணைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் பி.ஆர். அருள் மொழி தலைமை வகித்தார்.உடன் கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பத்ரி (எ) பழனிச்சாமி,துணை அமைப்பாளர் தங்கவேல் மற்றும் அரசு வழக்கறிஞர்கள் கணேசன்,ஜி.பி.சம்பத் , மோகன் பிரபு , விசுவநாதன், பாலசுப்ரமணியம், ஜிசா கார்த்திகேயன் மற்றும் வழக்கறிஞர்கள் பணை ரவி,பெசில் சதீஷ்குமார்,மணிமேகலை,அஜய் கோபாலகிருஷ்ணன்,நிர்மலா தேவி, ஜான்,செந்தமிழ்,சஜய், சங்கர் ஆகியோர் உள்ளனர்.